**SOP.189/2018**

**25-11-2021 ஆம் தேதி அன்று சாட்சி PW.1 நவீன்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**
(மாலை 4.05 மணிக்கு துவங்கப்பட்டது)

(1 ஆம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டும் முன்னிலையாகவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் முன்னிலை. குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை. எனவே, 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென முடித்து உத்திரவிடப்படுகிறது)

**குறுக்கு விசாரணை (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், வாரிசுரிமைச் சான்று வழங்கக் கோரி தாக்கல் செய்திருக்கிறேன். 1 ஆம் மனுதாரர் விஜயகுமாரி டி.எம்.ராகவனின் இரண்டாவது மனைவி என்றால், சரிதான். 2 ஆம் மனுதாரரும், 1,2 எதிர்மனுதாரர்களும் டி.எம்.ராகவனின் மகளும், மகன்களும் ஆவார்கள் என்றால், சரிதான். 3 மற்றும் 4 ஆம் மனுதாரர்களின் தாயார் கீதா (எனது தாயார்) 1984 ஆம் வருடத்தில் காலமானார். 1,2 எதிர்மனுதாரர்கள், 2 ஆம் மனுதாரர் எனது தாயார் கீதா ஆகியோர்கள் டி.எம்.ராகவனின் முதல் மனைவி விலாசினியின் மூலம் பிறந்த குழந்தைகள் என்றால் சரிதான். எனது பாட்டி விலாசினி 28.5.1985 ஆம் வருடத்தில் காலமானார் என்றால் சரிதான். என் தாத்தா டி.எம்.ராகவனின் குடும்பச் சொத்துக்கள் 1985 ஆம் வருடத்தில் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரிதான். 1985 ஆம் வருட பாகப் பத்திரத்தில் உப்பிலிபாளையம் கிராமம், சர்வே எண்.488/1 பி, சுமார் 20 செண்ட் பரப்பளவு சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சுரேஷ் (2 ஆம் எதிர்மனுதாரர்), டி.எம்.ராகவன், புஷ்பலதா (2 ஆம் மனுதாரர்) ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகும். மேற்படி மூவருக்கும் இடையில் பின்னிட்டு மேற்படி சர்வே எண்.488/1 பி சொத்தைப் பொருத்து பாகப்பிரிவினை ஆகி விட்டதா என்றால், ஆம், ஆகியுள்ளது. என் தாத்தா எழுதி வைத்ததாகச் சொல்லும்

உயில் ஆவணம் எப்பொழுது தெரிய வந்தது என்றால், 2010 ஆம் வருடவாக்கில்தான் தெரிய வந்தது. யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால், 1 ஆம் மனுதாரர் விஜயகுமாரி மூலம் தெரிந்து கொண்டேன். அசல் உயில் ஆவணம் யாரது பிடியில் இருந்து வந்தது என்றால், என் தாத்தா டி.எம்.ராகவனின் பிடியில் இருந்து வந்தது. அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையா என்றால், அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். மனு தாக்கல் தேதியில் அசல் உயில் ஆவணத்தை அல்லது அதன் நகலை மனுவோடு தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். அசல் உயில் ஆவணம் யார் வசம் இருந்தது என்பது பற்றி மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால், அசல் உயில் ஆவணம் பிடி குறித்து யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆதலால் அது பற்றி சொல்லவில்லை. கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேன். அசல் உயில் ஆவணத்தை என் தாத்தா டி.எம்.ராகவன்தான் என் கையில் கொடுத்தார். ஆனால் தேதி, நாள் ஞாபகமில்லை.சுமாராக 10 லிருந்து 12 வருடங்களுக்கு முன்பாக எனது தாத்தா டி.எம்.ராகவன் அசல் உயிலை என்னிடம் கொடுத்தார். உயில் ஆவணத்தில் யார், யார் சான்றொப்ப சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால், ஒரு சான்றொப்ப சாட்சி எனது தாத்தா வீட்டில் வேலை பார்த்து வந்தவர் ஆவார். மற்றொரு சான்றொப்ப சாட்சி பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. என் தாத்தா வாழ்நாள் காலத்தில் சொத்து சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. என் தாத்தா டி.எம்.ராகவன் வாழ்நாள் காலத்தில் சொத்து சம்மந்தமாக ஏதாவது பிரச்சனை இருந்து வந்ததா என்றால், அவ்வாறு பிரச்சனை ஏதும் இருந்து வரவில்லை. என் தாத்தா டி.எம்.ராகவனின் வாரிசுகளுக்கிடையில் என் தாத்தா வாழ்நாள் காலத்தில் பிரச்சனை எதுவும் இருந்து வந்ததா என்றால், ஆம், இருந்து வந்தது. 1984 ஆம் வருடத்திலிருந்தே 1 ஆம் எதிர்மனுதாரரோடு என் தாத்தா சுமூகமான உறவில் இருந்து வரவில்லை. 1986 ஆம் வருடத்திலிருந்து சுரேஷ் உடனும் என் தாத்தாவிற்கு சுமூகமான உறவு இருந்து வரவில்லை.

நான் 1980 ஆம் வருடம் கோவையில் பிறந்தேன். எனக்கு பூர்வீகம் கோயமுத்தூர் ஆகும். நான் பிறந்ததிலிருந்தே என் தாத்தா வீட்டில்தான் வளர்ந்து வந்தேனா என்றால், இல்லை, 1983 ஆம் வருடத்திலிருந்து என் தாத்தா வீட்டில் வளர்ந்து வந்தேன். தற்பொழுதும் என் தாத்தா டி.எம்.ராகவன் வீட்டில்தான் நான் குடியிருந்து வருகிறேன். 2 ஆம் எதிர்மனுதாரர்தான் தேவி அன் கோ என்ற வியாபார நிறுவனத்தை பார்த்து வருகிறார் என்றால், சரியல்ல. குடும்பத்திற்குள் உட்பூசல் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. டி.எம்.ராகவன் உயில் ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால், சரியல்ல. என் தாத்தாவின் வாழ்நாள் காலத்தில் குடும்ப உறுப்பினர்களுக்குள் பிரச்சனை எதுவும் எழாத காரணத்தினால், என் தாத்தா டி.எம்.ராகவன் உயில் ஆவணம் எழுதி வைக்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. அசல் உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தாத்தா டி.எம்.ராகவனின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. உப்பிலிபாளையம் கிராமம் சர்வே எண்.488/1 பி குறித்து டி.எம்.ராகவன் ஏதாவது ஏற்பாடு செய்துள்ளாரா என்றால், பாக சாசனம் செய்தார். பாகசாசனத்தில் என் தாத்தாவுக்கு சர்வே எண்.488/1 பி -யில் ஒதுக்கப்பட்ட சொத்தைப் பொருத்து எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். பாக சாசனத்திலும், செட்டில்மெண்ட் ஆவணத்திலும் உயில் ஆவணம் பற்றி சொல்லியுள்ளாரா என்றால், சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் என் தாத்தா டி.எம். ராகவன உயில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் பாக சாசனத்திலும், செட்டில்மெண்ட் ஆவணத்திலும் அது குறித்து சொல்லியிருப்பார், அவ்வாறு சொல்லாததால் உயில் ஆவணம் என்ற ஒன்றே என் தாத்தாவால் எழுதி வைக்கப்படவில்லை என்றால், சரியல்ல. மனுவின்கீழ் விவரித்துள்ள சொத்துக்களைப் பொருத்து 2 ஆம் எதிர்மனுதாரருக்கும் உரிமையுள்ளது என்றால், சரியல்ல. மனுவிற்காக வேண்டி பொய்யுரைக்கிறேன் என்றால், சரியல்ல.

**5** <u>ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

( 5 ஆம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டும், முன்னிலையாகவில்லை. எவ்வித முறையீடும் இல்லை. எனவே, 5 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென முடித்து உத்திரவிடப்படுகிறது)

(முடிக்கப்பட்ட நேரம் மாலை 4.45)

<u>மறு விசாரணை</u> இல்லை.

ஒம்/நவீன்குமார்,

ஒம்/ஆர்.சக்திவேல்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.